


# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"




Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

| | | | | | |
|---|---|---|---|---|---|
| VOLUME : 01 | ISSUE: 318 | 11.05.2026 | MONDAY | CHITHIRAI: 28 | PRICE : RS.5/- |
| மலர் : 01 | இதழ் : 318 | 11.05.2026 | திங்கள்கிழமை | சித்திரை : 28 | விலை : ரூ.5/- |

# "தமிழக முதல்வராக விஜய் பதவியேற்பு!"







சென்னை, மே.11-

தமிழக முதல்வராக பதவியேற்றார் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் ஜோசப் விஜய். அவருடன் 9 அமைச்சர்களும் பதவி ஏற்றனர்.

சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் நேற்று காலை 10 மணியளவில் பதவியேற்பு விழா தொடங்கியது. வந்தே மாதரம் பாடல் இசைக்க பதவியேற்பு விழா தொடங்கியது. பின்னர் தேசிய கீதம் பாடப்பட்டது, 3வதாகவே தமிழ்த் தாய் வாழ்த்து பாடப்பட்டது.

இதனையடுத்து தமிழகத்தின் 18வது முதல்வராக தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் ஜோசப் விஜய் பதவியேற்றுக் கொண்டார். அவருக்கு ஆளுநர் அர்லேகர் பதவிப் பிரமாணமும், ரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.

'சி.ஜோசப் விஜய் எனும் நான்' என்று விஜய் உறுதிமொழி கூறியபோது அரங்கம் முழுவதும் நிறைந்திருந்த தவெக தொண்டர்கள் ஆர்ப்பரித்தனர்.

முதல்வர் விஜய்யுடன் புஸ்ஸி என்.ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, கே.ஜி.அருண்ராஜ், கே.ஏ.செங்கோட்டையன், வெங்கடரமணன், நிர்மல்குமார், ராஜ்மோகன், டி.கே.பிரபு, கீர்த்தனா உள்ளிட்ட 9 பேர் அமைச்சர்களாக பதவியேற்றுக் கொண்டனர்.

இந்த நிகழ்வில் காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி, முன்னாள் ஆளுநர் தமிழிசை, கூட்டணி கட்சித் தலைவர்கள், விஜய்யின் பெற்றோர் எஸ்.ஏ.சந்திரசேகர், ஷோபா சந்திரசேகர், நடிகை த்ரிஷா, தயாரிப்பாளர் அர்ச்சனா கல்பாத்தி, விஜய்யின் நண்பர்கள், உறவினர்கள், திரையுலக, அரசியல் பிரமுகர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

சட்டப்பேரவைத் தேர்தலில் விஜய்யின் தவெக 108 இடங்களைக் கைப்பற்றி தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தது. எனினும், ஆட்சி அமைக்க 118 இடங்கள் தேவை என்பதால், 10 எம்எல்ஏக்களின் ஆதரவு தேவைப்பட்ட நிலையில், அவருக்கு காங்கிரஸ், சிபிஐ, சிபிஎம் கட்சிகள் ஆதரவளித்தன. விசிக நேற்று மாலை ஆதரவுக் கடிதத்தை வழங்கியது. தொடர்ந்து ஐயூஎம்எல் கட்சியும், கடைசி நேரத்தில் தவெகவுக்கு ஆதரவு அளிப்பதாக அறிவித்து கடிதம் வழங்கியது. அதன்படி, தவெகவுக்கு பெரும்பான்மைக்கு தேவையான 118 இடங்களை விட அதிகமாக ஆதரவு கிடைத்தது.

விஜய்க்கு ஆளுநர் அழைப்பு விடுத்தார். இதையடுத்து, விஜய் ஆளுநர் மாளிகைக்கு வந்தார். ஏற்கெனவே அங்கு வந்து காத்திருந்த காங்கிரஸ், இடதுசாரி கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களுடன் சென்று ஆளுநரை விஜய் சந்தித்தார். அப்போது, 120 எம்எல்ஏக்களின் ஆதரவுக் கடிதங்களை ஆளுநரிடம் விஜய் வழங்கினார்.

தொடர்ந்து, அரசியலமைப்பு சட்டப் பிரிவு 164ன் கீழ் விஜய்யை முதல்வராக நியமனம் செய்து அதற்கான ஆணையை ஆளுநர் அர்லேகர் வழங்கினார். ஆட்சி அமைக்கவும் விஜய்க்கு அழைப்பு விடுத்தது குறிப்பிடத்தக்கது.

## "தமிழக அரசுடன் இணைந்து பணியாற்றுவோம்" பிரதமர் மோடி வாழ்த்து; முதல்வர் விஜய் நன்றி





சென்னை: மே.11-

தமிழக முதல்வராக பதவியேற்றுள்ள ஜோசப் விஜய்க்கு வாழ்த்து தெரிவித்துள்ள பிரதமர் நரேந்திர மோடி, மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த மத்திய அரசு தமிழக அரசுடன் இணைந்து தொடர்ந்து பணியாற்றும் என கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'தமிழ்நாடு முதல்வராக பதவியேற்றுள்ள சி. ஜோசப் விஜய்க்கு வாழ்த்துகள். அவரது பதவிக்காலம் சிறப்பானதாக அமைய நல்வாழ்த்துகள். மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த மத்திய அரசு தமிழ்நாடு அரசுடன் இணைந்து தொடர்ந்து பணியாற்றும்' எனத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடியின் வாழ்த்துக்கு நன்றி தெரிவித்துள்ள முதல்வர் விஜய், 'முதல்வராக நான் பொறுப்பேற்றதையொட்டி, தனது கனிவான வாழ்த்துகளைத் தெரிவித்த பிரதமர் நரேந்திர மோடிக்கு எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது மக்களின் நலனும் முன்னேற்றமுமே எங்களின் ஒரே குறிக்கோளாகும். தமிழ்நாட்டின் தொடர் வளர்ச்சிக்கு, ஒன்றிய அரசின் முழுமையான ஆதரவையும் ஒத்துழைப்பையும் நாங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்' எனத் தெரிவித்துள்ளார்

சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் இன்று காலை நடந்த நிகழ்ச்சியில், தமிழகத்தின் முதல்வராக தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் ஜோசப் விஜய் பதவியேற்றுக் கொண்டார். அவருக்கு ஆளுநர் அர்லேகர் பதவிப் பிரமாணமும், ரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.

முதல்வர் விஜய்யுடன் புஸ்ஸி என்.ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, கே.ஜி.அருண்ராஜ், கே.ஏ.செங்கோட்டையன், வெங்கடரமணன், நிர்மல்குமார், ராஜ் மோகன், டி.கே.பிரபு, கீர்த்தனா உள்ளிட்ட 9 பேர் அமைச்சர்களாக பதவியேற்றுக் கொண்டனர். இன்று நடந்த பதவியேற்பு விழாவில் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ராகுல் காந்தி கலந்துகொண்டார். அவர் விழா மேடையில் விஜய்யின் அருகில் உள்ள இருக்கையில் அமர்ந்திருந்தார்.







## ஆனந்த், ஆதவ் அர்ஜுனா உள்ளிட்ட 9 அமைச்சர்கள் பதவியேற்பு

சென்னை: மே.11-

முதல்வர் விஜய்யுடன் ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, செங்கோட்டையன் உள்ளிட்ட 9 அமைச்சர்கள் பதவியேற்றுக் கொண்டனர்.

சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் இன்று காலை 10 மணியளவில் வந்தே மாதரம் பாடல் இசைக்க பதவியேற்பு விழா தொடங்கியது. பின்னர் தேசிய கீதம் பாடப்பட்டது, 3வதாகவே தமிழ்த் தாய் வாழ்த்து பாடப்பட்டது.

இதனையடுத்து தமிழகத்தின் 18வது முதல்வராக தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் சி.ஜோசப் விஜய் பதவியேற்றுக் கொண்டார். அவருக்கு ஆளுநர் அர்லேகர் பதவிப் பிரமாணமும், ரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.

விஜய்யை தொடர்ந்து 9 அமைச்சர்கள் பதவியேற்றுக் கொண்டனர். தவெக பொதுச் செயலாளர் புஸ்ஸி என்.ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, கே.ஜி.அருண்ராஜ், கே.ஏ.செங்கோட்டையன், வெங்கடரமணன், நிர்மல்குமார், ராஜ்மோகன், டி.கே.பிரபு, கீர்த்தனா உள்ளிட்டோருக்கு ஆளுநர் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். பதவியேற்புக்குப் பிறகு அமைச்சர்கள் அனைவருக்கும் முதல்வர் விஜய் கைக்குலுக்கி வாழ்த்து தெரிவித்தார்.

பதவியேற்றுக் கொண்ட அமைச்சர்களுக்கான இலாக்கா ஒதுக்கீடு பற்றிய அறிவிப்பு இன்று மாலை வெளியாகும் என்று தெரிகிறது.

## "தமிழக மக்களின் நம்பிக்கைகளை நிறைவேற்ற விஜய்க்கு வாழ்த்துகள்" ராகுல் காந்தி

புதுடெல்லி: மே.11-

'ஒரு புதிய தலைமுறை, ஒரு புதிய குரல், ஒரு புதிய தோற்றத்தை தமிழ்நாடு தேர்ந்தெடுத்துவிட்டது. தமிழ்நாட்டு மக்களின் நம்பிக்கைகளை நிறைவேற்ற விஜய்க்கு என் நல்வாழ்த்துகள்' என மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்தார். இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ' ஒரு புதிய தலைமுறை, ஒரு புதிய குரல், ஒரு புதிய தோற்றத்தை தமிழ்நாடு தேர்ந்தெடுத்துவிட்டது. தமிழ்நாட்டு மக்களின் நம்பிக்கைகளை நிறைவேற்ற விஜய்க்கு என் நல்வாழ்த்துகள்' எனத் தெரிவித்துள்ளார்.

சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் இன்று காலை நடந்த நிகழ்ச்சியில், தமிழகத்தின் முதல்வராக தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் ஜோசப் விஜய் பதவியேற்றுக் கொண்டார். அவருக்கு ஆளுநர் அர்லேகர் பதவிப் பிரமாணமும், ரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.

முதல்வர் விஜய்யுடன் புஸ்ஸி என்.ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, கே.ஜி.அருண்ராஜ், கே.ஏ.செங்கோட்டையன், வெங்கடரமணன், நிர்மல்குமார், ராஜ் மோகன், டி.கே.பிரபு, கீர்த்தனா உள்ளிட்ட 9 பேர் அமைச்சர்களாக பதவியேற்றுக் கொண்டனர். இன்று நடந்த பதவியேற்பு விழாவில் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ராகுல் காந்தி கலந்துகொண்டார். அவர் விழா மேடையில் விஜய்யின் அருகில் உள்ள இருக்கையில் அமர்ந்திருந்தார்.

## 3 அமைச்சர்கள், தற்காலிக சபாநாயகர்: விஜய் அமைச்சரவையில் தென்மாவட்டத்துக்கு முக்கியத்துவம்!

மதுரை: மே.11-

தவெக அமைச்சரவையின் முதல் பட்டியலில் தென்மாவட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் விதமாக 3 அமைச்சர்கள், தற்காலிக துணை சபாநாயகர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் கட்சி தொடங்கிய 2 ஆண்டுகளில் முதல் தேர்தலிலேயே 234 தொகுதிகளிலும் தவெக தனித்து களமிறங்கியது. திமுக, அதிமுக கட்சிகள் பல கட்சிகளுடன் கூட்டணி அமைத்து போட்டியிட்டன. இதில், தவெக கட்சி தலைவர் விஜய் போட்டியிட்ட திருச்சி கிழக்கு, பெரம்பூர் உள்ளிட்ட 108 தொகுதிகளில் தவெக வெற்றி கண்டது.

ஆட்சியமைக்க பெரும்பான்மை இல்லாத நிலையில், காங்கிரஸ்,



இந்திய கம்யூனிஸ்டு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சிகள், விசிக, இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் கட்சிகள் நிபந்தனையற்ற ஆதரவு அளித்துள்ளன. இதன் மூலம் 120 எண்ணிக்கையை பெற்று தமிழக முதல்வராக விஜய் இன்று பதவி ஏற்றார். அவருக்கு தமிழக ஆளுநர் அர்லேக்கர் பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

முதல்வருடன் செங்கோட்டையன், புஸ்ஸி ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, நிர்மல்குமார் உட்பட 9 பேர் அமைச்சர்களாக பதவி ஏற்றனர். விஜய்யின் முதல் அமைச்சரவை பட்டியலில் தென்மாவட்டத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு இருக்கிறது.

மதுரை திருப்பரங்குன்றத்தில் வெற்றி பெற்ற நிர்மல்குமார், காரைக்குடி தொகுதியில் சீமானை தோல்வி அடைய செய்த மருத்துவர் டி.கே. பிரபு, சிவகாசியில் வென்ற கீர்த்தனா ஆகியோருக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது. அதேபோல சோழவந்தான் தொகுதியில் வெற்றி பெற்ற கருப்பையாவுக்கு தற்காலிக சபாநாயகர் பொறுப்பும் வழங்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தவெக நிர்வாகிகள் கூறுகையில், "தென்மாவட்டங்களிலுள்ள 51 சட்டப்பேரவை தொகுதிகளில் 25 இடங்களில் வெற்றி பெற்றுள்ளோம். பல்வேறு தொகுதிகளில் இரண்டாமிடத்திலும் வந்துள்ளோம். தென் மண்டலத்தில் திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சிகளுக்கு இணையாக வென்றுள்ளதால் தென் மண்டலத்திற்கு எங்களது அமைச்சரவையில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு முதல் பட்டியலிலேயே 3 அமைச்சர்கள் மற்றும் தற்காலிக சபாநாயகர் பதவி ஒதுக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை விரிவாக்கத்திலும் தென்மாவட்டத்தில் மேலும், ஓரிருவருக்கு அமைச்சர் பதவி கிடைக்கும் என நம்புகிறோம். மதுரை மத்தி, கிழக்கு தொகுதியில் இரு திமுக அமைச்சர்களை தோற்கடித்தவர்களில் ஒருவருக்கு அமைச்சர் பதவி வழங்க வாய்ப்புள்ளது ' என்றனர்.

## 200 யூனிட் இலவச மின்சாரம் யாருக்கெல்லாம் பலன்?

சென்னை: மே.11-

தமிழக முதல்வராக பதவியேற்றுள்ள தவெக தலைவர் விஜய், தனது முதல் அரசாணையாக 200 யூனிட் இலவச மின்சாரம் வழங்கும் கோப்பில் கையெழுத்திட்டுள்ளார்.

இந்த அறிவிப்பு, தமிழகத்தின் ஏழை எளிய குடும்பங்களிடையே வரவேற்பைப் பெற்றுள்ள அதே வேளையில், அதன் நடைமுறை நுணுக்கங்கள் குறித்த விவாதங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்தத் திட்டத்தினால் அதிகம் பலனடையப் போவது மாதத்திற்கு 200 யூனிட்டுகளுக்கும் குறைவாக மின்சாரம் பயன்படுத்தும் எளிய குடும்பங்கள் தான். இதுவரை 100 யூனிட்டுகளுக்கு மேல் பயன்படுத்தும் ஒவ்வொரு யூனிட்டுக்கும் கட்டணம் செலுத்தி வந்தவர்கள், இனி 200 யூனிட் வரை பயன்படுத்தினால் ஒரு ரூபாய் கூட மின் கட்டணம் செலுத்தத் தேவையில்லை.

ஒரு எளிய குடும்பத்தின் வீட்டில் இரண்டு மின்விசிறிகள், ஒரு தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் சில விளக்குகள் மட்டுமே பயன்படுத்துபவர்களுக்கு, (200 யூனிட்களுக்குள் பயன்படுத்தினால்) மின்கட்டணம் பூஜ்ஜியமாக மட்டுமே வரும்.

இன்னொரு புறம், முந்தைய நடைமுறையின்படி, 500 யூனிட்களுக்கு மேல் பயன்படுத்தினாலும் 100 யூனிட் இலவச மின்சாரம் என்ற சலுகை அனைவருக்கும் கிடைத்துவந்தது. ஆனால் தற்போது மின் பயன்பாடு 500 யூனிட்டைக் கடந்துவிட்டால் (உதாரணமாக 505 யூனிட் என்று வைத்துக் கொண்டால்), இந்த 200 யூனிட் இலவசம் கிடைக்காது.

அதுமட்டுமின்றி, பழைய முறையில் கிடைத்து வந்த 100 யூனிட் இலவசமும் கிடைக்க வாய்ப்பில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. அதாவது, 500 யூனிட்டைக் கடப்பவர்கள், பயன்படுத்திய மொத்த யூனிட்டுகளுக்கும் முழு கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும்.

200 முதல் 500 யூனிட்டுகளுக்குள் பயன்படுத்துபவர்களுக்கு, இந்தத் திட்டம் பழைய முறையை விடக் கூடுதல் லாபத்தைத் தரும். சிக்கனமாக மின்சாரம் பயன்படுத்தும் எளிய மக்களுக்கு இந்த திட்டம் பலன் தரக்கூடியதாக இருக்கும்.

ஆனால், தற்போது நடுத்தரக் குடும்பங்களிலேயே வீட்டுக்கு இரண்டு ஏசி இருக்கிறது. கோடைக்காலங்களில் கடும் வெப்பம் காரணமாக இந்த இரண்டு ஏசிகளும் தொடர்ந்து ஓடிக் கொண்டிருப்பதை தவிர்க்க முடியவில்லை.

அதே போல தமிழக வெற்றிக் கழகத்தின் தேர்தல் அறிக்கையை வெளியிட்ட போது, ஒவ்வொரு குடும்பத்துக்கும் மாதம் 200 யூனிட் இலவச மின்சாரம் என்று விஜய் தெரிவித்தார். ஆனால் தற்போது இரண்டு மாதங்களுக்கு, அதுவும் 500 யூனிட்களுக்குள் பயன்படுத்தினால் மட்டுமே 200 யூனிட் இலவசம் என்று அறிவிக்கப்பட்டிருப்பது ஏமாற்றத்தை அளிப்பதாக ஒரு தரப்பினர் குற்றம்சாட்டி வருகின்றனர்.

ஒவ்வொரு மாதமும் அனைவருக்கும் 200 யூனிட் இலவசம் வழங்கினால், அரசுக்கு ஆண்டுக்கு சுமார் ரூ.12,000 கோடி கூடுதல் செலவாகும். ஏற்கனவே நஷ்டத்தில் இருக்கும் மின்சார வாரியத்தைப் பாதுகாக்கவே, இரண்டு மாதங்களுக்கு 500 யூனிட் என்ற உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

500 யூனிட்களுக்குள் பயன்படுத்தினால் 200 யூனிட் இலவச மின்சாரம் வழங்கப்படும் அதே வேளையில், 500 யூனிட்களை கடந்தால் பழைய முறைப்படி 100 யூனிட் இலவச மின்சாரம் ரத்தாகாமல் தொடர வேண்டும் என்பதே நடுத்தர மக்களின் கோரிக்கையாக உள்ளது.

# திருச்சி கிழக்கு தொகுதி எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்தார் முதல்வர் விஜய்



சென்னை:மே.11-

திருச்சி கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்ற முதல்வர் விஜய், அந்த தொகுதியில் தனது பதவியை ராஜினாமா செய்தார். தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் திருச்சி கிழக்கு மற்றும் பெரம்பூர் ஆகிய இரு தொகுதிகளில் போட்டியிட்டு வெற்றி பெற்றார் தவெக தலைவர் விஜய். இந்த சூழலில் திருச்சி கிழக்கு தொகுதியில் தனது எம்எல்ஏ பதவியை விஜய் ராஜினாமா செய்துள்ளார்.

இதுகுறித்து அரசு தரப்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், 'தமிழக முதல்வர் விஜய் பதவியேற்பதற்கு முன்பாக திருச்சி கிழக்கு சட்டப்பேரவை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்வதற்கான கடிதத்தை இன்று, தலைமைச் செயலகத்தில் அமைச்சர்கள் செங்கோட்டையன், வெங்கட்ரமணன் ஆகியோர், சட்டப்பேரவை முதன்மை செயலாளர் கி.சீனிவாசனிடம் வழங்கினார்கள்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் இன்று காலை நடந்த நிகழ்ச்சியில், தமிழகத்தின் முதல்வராக தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் ஜோசப் விஜய் பதவியேற்றுக் கொண்டார். அவருக்கு ஆளுநர் அர்லேகர் பதவிப் பிரமாணமும், ரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார். முதல்வர் விஜய்யுடன் புஸ்ஸி என்.ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, கே.ஜி.அருண்ராஜ், கே.ஏ.செங்கோட்டையன், வெங்கடரமணன், நிர்மல்குமார், ராஜ் மோகன், டி.கே.பிரபு, கீர்த்தனா உள்ளிட்ட 9 பேர் அமைச்சர்களாக பதவியேற்றுக் கொண்டனர். இன்று நடந்த பதவியேற்பு விழாவில் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ராகுல் காந்தி கலந்துகொண்டார்.

# மாணவர் பேரவை முதல் முதல்வர் வரை: சுவேந்து அதிகாரி கடந்து வந்த அரசியல் பாதை



புதுடெல்லி: மே.11-

மேற்கு வங்கத்தில் பாஜக முதல் முறையாக ஆட்சியைக் கைப்பற்றியது. முதல்வராக சுவேந்து அதிகாரி (55) நேற்று பொறுப் பேற்றார். இவர், 1970ம் ஆண்டு டிசம்பர் 15ம் தேதி பிராமண குடும்பத்தில் பிறந்தவர். இவரது குடும்பம், கிழக்கு மேதினிப்பூர் மாவட்டத்தின் காந்த் பகுதியில் அரசியல் செல்வாக்கு மிக்கது. சுவந்துவின் தந்தை சிஷிர் அதிகாரி, தாயார் காயத்ரி அதிகாரி. கடந்த 2009 முதல் தொடர்ந்து 3 முறை காங்கிரஸ் எம்.பியாக இருந்தவர் சிஷிர். பிரதமர் மன்மோகன் சிங் அமைச்சரவையில் இணை அமைச்சராகவும் இருந்தவர்.

அதன் மூலம் அரசியல் பாடங்களை வீட்டில் இருந்தே கற்றவர் சுவேந்து. கடந்த 1989ல் கல்லூரியில் படிக்கும் போது, காங்கிரஸ் மாணவர் பேரவை மூலம் தனது அரசியல் பயணத்தைத் தொடங்கினார். பின்னர் 1995ல், காந்த்தி நகராட்சி மன்ற தேர்தலில் போட்டியிட்டு உறுப்பினராகி தலைவராகவும் பொறுப்பேற்றார்.

அதன்பின்னர் 1998ல் திரிணமூல் காங்கிரஸ் கட்சியை (டிஎம்சி) மம்தா தொடங்கிய போது, அதிகாரி குடும்பத்தினர் அனைவருமே அதில் இணைந்தனர். கடந்த 2006ல் சுவேந்து டிஎம்சி எம்எல்ஏவாக காந்த்தியின் தெற்கு தொகுதியில் தேர்வானார். 2009 மக்களவைத் தேர்தலில் தம்லுக் தொகுதியில் 1,72,000 வாக்குகள் வித்தியாசத்தில் இடதுசாரி வேட்பாளரைச் சுவேந்து தோற்கடித்தார். நந்திகிராமில் விவசாயிகளின் நிலத்தை கையகப்படுத்த இடதுசாரி அரசு எடுத்த முடிவை எதிர்த்து 2007ல் போராட்டம் தொடங்கியது. இதில், தீவிரமாகப் பங்கேற்றது சுவேந்து அதிகாரியின் வாழ்க்கையில் திருப்புமுனையானது.

அவர் 'பூமி உச்சேத் பிரதிரோத் சமிதி' என்ற அமைப்பை உருவாக்கி நந்திகிராம் கிராமங்களில் விவசாயிகளைக் காக்கும் அரணாகச் செயல்பட்டார்.

இதனால் கடந்த 2011ல் 34 ஆண்டு கால இடதுசாரி அரசின் வீழ்ச்சிக்கு நந்திகிராம் போராட்டம் வழிவகுத்தது. 2016 சட்டப்பேரவைத் தேர்தலில் வென்றதால் எம்.பி. பதவியை ராஜினாமா செய்த சுவேந்து, முதல்வர் மம்தா அரசில் அமைச்சரானார்.

மம்தா பானர்ஜியின் விசுவாசியாக இருந்தவருக்கு 2020ல் கருத்து வேறுபாடு தொடங்கியது. அதன்பின் டிஎம்சியில் இருந்து விலகியவர், 2021ல் பாஜகவில் இணைந்தார். 2021 தேர்தலில், மம்தா நந்திகிராமில் போட்டியிட்ட போது அவரை எதிர்த்த சுவேந்து வெற்றி பெற்றார். எதிர்க்கட்சித் தலைவரான சுவேந்து, மேற்கு வங்க மாநில பாஜகவின் முகமாக உருவெடுத்தார்.

பாஜகவை வெறும் 3 எம்எல்ஏக்களில் இருந்து 77 என உயர்த்தியவர் 2026 தேர்தலில் ஆட்சி அமையக் காரணமாகி விட்டார். சுவந்துவின் சகோதரர் சவுமேந்துக்கு, சில மாதங்களுக்கு முன்புதான் திருமணமானது. ஆனால், சுவேந்து இன்னும் திருமணம் செய்யவில்லை.

இதுகுறித்து கேட்டால், ''எனது பகுதியில் சுதந்திரத்துக்காகப் போராடிய வீரர்கள் சதீஷ் சமந்த், சுஷில் தாரா மற்றும் அஜய் முகர்ஜி ஆகியோர் வழியில் நானும் திருமணம் செய்து கொள்ளாமல் வாழ்க்கையை அரசியலுக்கு அர்ப்பணித்துள்ளேன்'' என்று உறுதியாகக் கூறினார். கடந்த 15 ஆண்டு கால மம்தாவின் ஆட்சிக்கு முற்றுப் புள்ளி வைத்து முதல் முறையாகப் பாஜக ஆட்சி அமைக்க சுவேந்துவின் பங்கு மிகப்பெரியது

# அமலாக்கத் துறை மீண்டும் சோதனை: பஞ்சாப் அமைச்சர் சஞ்சீவ் அரோரா கைது



புதுடெல்லி:மே.11-

பஞ்சாப் அமைச்சர் சஞ்சீவ் அரோரா வீட்டில் அமலாக்கத் துறை அதிகாரிகள் நேற்று மீண்டும் சோதனை நடத்தி கைது செய்தனர்.

சண்டிகரின் செக்டர் 2ல் உள்ள பஞ்சாப் தொழில் துறை அமைச்சர் சஞ்சீவ் அரோராவின் இல்லத்துக்கு, நேற்று காலை சுமார் 20 வாகனங்களில் சென்று அமலாக்கத் துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர்.சண்டிகர் தவிர, டெல்லியில் இரண்டு இடங்களிலும், குருகிராமின் உத்யோக் விஹாரில் உள்ள ஹாம்ப்டன் ஸ்கை ரியாலிட்டி நிறுவனத்திலும் சோதனைகள் நடத்தப்பட்டன. பின்னர் சஞ்சீவ் அரோராவை அதிகாரிகள் கைது செய்தனர்.ரூ.100 கோடிக்கும் அதிகமான மதிப்புள்ள செல்போன்களை கொள்முதல் செய்ததாக போலியான நிறுவனங்களிடம் இருந்து ஜிஎஸ்டி ரசீது பெறப்பட்டது தொடர்பாக அமைச்சர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.இதுதொடர்பாக, கடந்த ஏப்ரல் 17ம் தேதி அரோரா மற்றும் அவருடன் தொடர்புடைய நிறுவனங்களில் அமலாக்கத் துறை சோதனை நடத்தியது. இந்நிலையில் மீண்டும் சோதனை நடத்தப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக, ஹாம்ப்டன் ஸ்கை ரியாலிட்டி, அரோரா மற்றும் தொடர்புடைய நிறுவனங்களுக்குச் சொந்தமான ரூ.157.12 கோடி மதிப்புள்ள அசையும் மற்றும் அசையா சொத்துகளை அமலாக்கத் துறை தற்காலிகமாக முடக்கியுள்ளது.டெல்லி முன்னாள் முதல்வர் அர்விந்த் கேஜ்ரிவால் தனது எக்ஸ் சமூக வலைதள பதிவில், ''மேற்கு வங்கத்தில் தேர்தல் முடிந்த நிலையில், மோடி பஞ்சாபில் அமலாக்கத் துறை சோதனைகளைத் தொடங்கியுள்ளார். அமலாக்கத் துறை சோதனைகளுக்குப் பிறகு ஆம் ஆத்மி மாநிலங்களவை எம்.பி. அசோக் மிட்டல் பாஜகவில் சேர்ந்தார். இதே வழியில் அரோராவுக்கு எதிராக சோதனை நடத்தியும் அவர் பாஜகவில் சேரவில்லை. அதனால் அவருக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் மீண்டும் ஒரு சோதனை நடந்துள்ளது'' என்று கூறியுள்ளார்.

# "அமைச்சர் ஆதவ் அர்ஜுனாவை முதல்வர் விஜய் கண்காணிக்க வேண்டும்": ஜோஸ் சார்லஸ்



புதுச்சேரி:மே.11-

அமைச்சர் ஆதவ் அர்ஜுனாவை முதல்வர் விஜய் கண்காணிக்குமாறு லஜக தலைவர் ஜோஸ் சார்லஸ் கேட்டுக்கொண்டுள்ளார். தமிழகத்தில் முதல்வராக தவெக தலைவர் விஜய் இன்று பொறுப்பேற்றார். அவரது அமைச்சரவையில் ஆதவ் அர்ஜுனா இடம் பிடித்துள்ளார். இவர் லாட்டரி அதிபர் மார்டினின் மருமகன் ஆவார். லாட்டரி அதிபர் மார்டின் மகன் ஜோஸ் சார்லஸ் மார்டின் புதுச்சேரியில் லஜக கட்சியைத் தொடங்கினார். அவர் தவெகவுடன் கூட்டணி அமைக்க முதலில் முயற்சி செய்தும், விஜய் தரப்பிலிருந்து பதில் கிடைக்கவில்லை. அதையடுத்து என்டிஏ கூட்டணியில் இடம் பிடித்து எம்எல்ஏவாகியுள்ளார். புதுச்சேரி அமைச்சராக முயற்சித்து வருகிறார். ஆதவ் அர்ஜுனாவை தொடர்ந்து ஜோஸ் சார்லஸ் விமர்சித்து வருகிறார். அவர் மீது பல குற்றச்சாட்டுகளையும் தெரிவித்து வந்தார். தற்போது தனது சகோதரி கணவரான ஆதவ் அர்ஜுனா தமிழக அமைச்சராகியுள்ளது பற்றி ஜோஸ் சார்லஸ் மார்டின் கூறியதாவது: ஆதவ் அர்ஜுனாவை சரியாக கட்டுப்பாட்டுடன் விஜய் கண்காணித்து பார்த்துக் கொள்ளவேண்டும். தவறு நடக்காமல் பார்த்துக் கொள்ளாவிட்டால், நாட்டுக்கு தவறாகிவிடும். இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.



## மேற்கு வங்கத்தில் திரிணமூல் தோல்வி

# 15 ஆண்டுக்குப்பின் தலைமுடியை மழித்து சபதத்தை நிறைவேற்றிய பாஜக ஆதரவாளர்

கூச் பெஹார்:மே.11-

மேற்கு வங்க மாநிலம் கூச் பெஹார் மாவட்டத்தின் பாமன் பாரா கிராமத்தைச் சேர்ந்தவர் பனேஷ்வர் பர்மன். செங்கல் சூளையில் பணியாற்றும் புலம் பெயர்ந்த தொழிலாளியான இவர், தீவிர பாஜக ஆதரவாளர்.

கடந்த 2011ம் ஆண்டு மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணமூல் காங்கிரஸ் முதன் முதலில் ஆட்சியைப் பிடித்த போது, அந்த ஆட்சி அகலும் வரை தனது தலைமுடியை வெட்டப் போவதில்லை என இவர் உறுதி பூண்டார்.

சுமார் 14 ஆண்டுகளுக்கும் மேலாக தனது தலைமுடியை வெட்டாமல் இருந்த பர்மன், கடந்த வியாழக்கிழமை அக்கம் பக்கத்தினர் முன்னிலையில் தலையை மொட்டை அடித்து சபதத்தை முடித்துக் கொண்டார்.

இதுகுறித்து பனேஷ்வர் பர்மன் கூறியதாவது: திரிணமூல் ஆட்சிக்கு வந்ததில் இருந்து நான் முடி திருத்தும் நிலையத்தின் பக்கமே செல்லவில்லை. மே 4ம் தேதி தேர்தல் முடிவுகள் வெளியான போது, அதிகாலை முதலே தொலைக்காட்சியே கதி என இருந்தேன். பாஜக 100 இடங்களைத் தாண்டிய போது எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. இப்போது புதிய ஆட்சி வந்துவிட்டது, இனி வளரும் முடியை எப்போது வேண்டுமானாலும் வெட்டிக் கொள்வேன்.

கடந்த 15 ஆண்டுகளில் எங்கள் பகுதியில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. எனது மகன் மற்றும் இரு மகள்கள் என எனது குடும்பம் பெரும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்தது. இந்த நிலை மாற வேண்டும் என்பதற்காகவே அரசியல் மாற்றத்தை விரும்பினேன். இவ்வாறு பர்மன் கூறினார்.

பர்மன் தனது சபதத்தை முடித்துக் கொண்ட செய்தி காட்டுத் தீயாகப் பரவியதை அடுத்து, கிராம மக்கள் அவர் வீட்டின் முன் திரண்டனர். அவரது மொட்டை அடிக்கும் வைபவத்துக்குப் பிறகு, குடும்பத்தினர் மற்றும் ஊர் மக்கள் அனைவருக்கும் 'பொரி' வழங்கி உற்சாகமாகக் கொண்டாடினர்.

# பொத்தேரியில் டாரஸ் லாரி மோதி அண்ணன் கண் முன்பு தம்பி உயிரிழப்பு

மறைமலை நகர்:மே.11-

காஞ்சி மாவட்டம், படப்பை அருகே உள்ள ஏரிவாக்கம் கிராமத்தை சேர்ந்தவர் ரோகித் (20), இவர் பொத்தேரில் உள்ள தனியார் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பட்டப்படிப்பு படித்து வருகிறார்.இந்நிலையில் இவரது தம்பி வைபவுடன் (16), நேற்று முன்தினம் பைக்கில் பொத்தேரி ஜி.எஸ்.டி. சாலையில் சென்று கொண்டிருந்தார். பொத்தேரி ரயில் நிலையம் எதிரே செல்லும் போது பின்னால் வந்த டாரஸ் லாரி, பைக் மீது மோதியது. இதில் தூக்கி வீசப்பட்ட வைபவ் பலத்த காயம் அடைந்து அண்ணன் கண் முன்னர் உயிரிழந்தார். காயமடைந்த லோகித்தை அக்கம் பக்கத்தினர் மீட்டு அருகிலுள்ள தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். தகவல் அறிந்த தாம்பரம் போக்குவரத்து புலனாய்வு போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

மற்றொரு சம்பவம்: திருப்போரூரை அடுத்த பொன்மார் மலைத்தெருவை சேர்ந்த ஆனந்த ராஜ் (31), நேற்று முன்தினம் மணிக்கு பஜாஜ் பல்சர் பைக்கில் புதுப்பாக்கம் தாழம்பூர் சாலையில் சென்றபோது தாழம்பூர் சீனிவாச நகர் ஸ்ரீராம் ஸ்டீல்ஸ் கடை அருகே நிலைதடுமாறி கீழே விழுந்தார். இதில், தலையின் பின் பக்கம் பலத்த காயம் ஏற்பட்டது. இதில், அந்த வழியாக சென்றவர் ஆனந்தராஜை மீட்டு தாம்பரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பினர். அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் உயிரிழந்தார். இதுதொடர்பாக, பள்ளிக்கரணை போக்குவரத்து புலனாய்வு பிரிவு போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரிக்கின்றனர்.


# ஓய்வு பெற்ற ஆசிரியரிடம் ரூ.82 லட்சம் டிஜிட்டல் மோசடி



மகபூபாபாத்:மே.11-

தெலங்கானா மாநிலம் மகபூபாபாத் பகுதியில் வசிக்கும் ஓய்வு பெற்ற அரசு ஆசிரியரிடம் கடந்த ஏப்ரல் மாதம் 11ம் தேதி தொலைபேசியில் பேசிய மர்ம நபர்கள், சிபிஐ அதிகாரிகள் என்றும், உங்கள் மீது உங்களின் ஆதார் எண்ணின் படி 17 வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன என்றும், ஆதலால் டிஜிட்டல் கைது செய்யப்பட்டுள்ளீர்கள் எனவும் மிரட்டி உள்ளனர்.பின்னர், கைது நடவடிக்கையில் இருந்து காப்பாற்ற உடனடியாக ரூ.75 லட்சத்தை மும்பையில் உள்ள ஒரு வங்கிக்கு அனுப்பி வைக்கும் படியும், இவ்வழக்கு விசாரணை முடிந்த பின்னர் மே மாதம் 2ம் தேதி உங்கள் பணம் மொத்தமும் மீண்டும் உங்கள் வங்கி கணக்கிற்கே அனுப்பி வைக்கப்படும் எனவும் கூறி உள்ளனர். அவர்கள் கூறியபடி கடந்த ஏப்ரல் மாதம் 15ம் தேதி முதல் படிப்படியாக ரூ.82 லட்சம் அனுப்பி உள்ளார்.பின்னர் ஏமாற்றப்பட்டதை அறிந்து ஆசிரியர் மற்றும் அவரது மனைவி ஆகிய இருவரும் இது தொடர்பாக மகபூபாபாத் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். அந்த புகாரின் அடிப்படையில் போலீஸார் வழக்கு பதிவு செய்து குற்றவாளிகளை பிடிக்க தனிப்படை அமைத்துள்ளனர்.

# தமிழகத்தில் 2013ல் தேர்வு செய்யப்பட்ட 23 மாவட்ட நீதிபதிகளின் நியமனம் செல்லும்: ஐகோர்ட்



சென்னை::மே.11-

தமிழகத்தில் கடந்த 2013ம் ஆண்டு 23 மாவட்ட நீதிபதிகள் பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது.இந்த பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 23 மாவட்ட நீதிபதிகளின் குற்றப் பின்புலம் முறையாக ஆராயப் படவில்லை, தேர்வாகியுள்ள பலர் குறைந்தது 7 ஆண்டுகள் வழக்கறிஞராக பயிற்சி மேற்கொள்ளவி௺ல்லை. தேர்வில் இன சுழற்சி மற்றும் இடஒதுக்கீடு முறையாக பின்பற்றப் படவில்லை. தரவரிசைப் பட்டியலில் குளறுபடிகள் உள்ளதால் தகுதியற்ற பலர் தேர்வாகி உள்ளனர். 23 பேரின் தேர்வுப்பட்டியலை ரத்து செய்து மீண்டும் திருத்திய தேர்வுப்பட்டியலை வெளியிட வேண்டும், எனக்கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் கடந்த 2013, 2014 காலகட்டத்தில் 3 வழக்குகள் தொடரப்பட்டன.

பல ஆண்டுகளாக நிலுவையில் இருந்து வந்த வழக்குகள் மீதான விசாரணை நீதிபதிகள் அனிதா சுமந்த், மும்முனேனி சுதீர் குமார் ஆகியோர் அடங்கிய அமர்வில் நடந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள் அளித்த தீர்ப்பில் கூறியிருப்பதாவது:

கடந்த 2013ம் ஆண்டு மாவட்ட நீதிபதிகளாக தேர்வாகி 12 ஆண்டுகளாக அமர்வு நீதிபதிகளாக பதவி வகித்து வரும் 23 பேருக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்குகளில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் பொதுவாக உள்ளன. 23 மாவட்ட நீதிபதிகளை தேர்வு செய்வதற்காக மூத்த நீதிபதிகள் கொண்ட தேர்வுக்குழு நியமிக்கப்பட்டு நியமனம் முறையாக நடந்துள்ளது. எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு நடைமுறைகள் விதிமுறைகளின் படியே நடந்துள்ளது. இது போன்ற ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் மாவட்ட நீதிபதிகளின் தேர்வு நடைமுறையில் தலையிட முடியாது. எனவே, 2013ம் ஆண்டு தேர்வான 23 மாவட்ட நீதிபதிகளின் நியமனம் செல்லும் என்பதால் அதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்குகளை தள்ளுபடி செய்கிறோம். இவ்வாறு நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் கூறியுள்ளனர்.



# நிறுவனத்தை ரூ.16,000 கோடிக்கு விற்று ஊழியர்களுக்கு ரூ.2,000 கோடி வழங்கிய நிர்வாகம்

லூசியானா:மே.11-

அமெரிக்காவின் லூசியானா மாகாணம் மிண்டன் நகரில் ஃபைபர் பாண்ட் கார்ப்பரேஷன் என்ற மின்சாதன நிறுவனம் உள்ளது.இந்நிறுவனம் ரூ.16 ஆயிரம் கோடிக்கு, ஈட்டன் என்ற நிறுவனத்துக்கு கடந்த ஆண்டு விற்கப்பட்டது. இதில் 15 சதவீத தொகை நிறுவனத்தில் பணியாற்றும் 540 ஊழியர்களுக்கு செல்ல வேண்டும் என ஃபைபர் பாண்ட் நிறுவன உரிமையாளர் கிரகாம் வாக்கர் நிபந்தனை விதித்தார்.இந்தத் தொகையை 5 ஆண்டுகளுக்கு பிரித்து வழங்க வேண்டும். அதுவரை அவர்கள் பணியில் தொடர வேண்டும் என்று நிபந்தனையும் விதிக்கப்பட்டது. ஆனால், 65 வயதுக்கு மேற்பட்ட ஊழியர்கள் முழுத் தொகையாக ரூ.3.7 கோடி பெற்றனர்.

# ஆகஸ்ட் மாதத்தில் ஏழுமலையானை தரிசிக்க 18ம் தேதி ஆன்லைனில் டிக்கெட்கள் வெளியீடு



திருமலை: மே.11-

ஆகஸ்ட் மாத ஏழுமலையான் தரிசனத்துக்காக மே 18ம் தேதி காலை 10 முதல் 20ம் தேதி காலை 10 மணி வரை, பக்தர்கள் குலுக்கல் முறையில் சுப்ரபாதம், தோமாலை சேவை, அர்ச்சனை, அஷ்டதள பாத பத்மாராதனை சேவை போன்ற ஆர்ஜித சேவைகளுக்கான டிக்கெட்டுகளை முன்பதிவு செய்து கொள்ளலாம்.21ம் தேதி காலை 10 மணிக்கு திருக்கல்யாண உற்சவம், ஊஞ்சல் சேவை, ஆர்ஜித பிரம்மோற்சவம், சகஸ்ர தீப அலங்கார சேவைகளுக்கான டிக்கெட்டுகளை பக்தர்கள் முன்பதிவு செய்து கொள்ளலாம். 23ம் தேதி காலை 10 மணிக்கு இலவசமாக அங்கபிரதட்சண டோக்கன்களும், 11 மணிக்கு ஸ்ரீவாணி அறக்கட்டளைக்கான டிக்கெட்டுகளும், இதே நாள் மதியம் 3 மணிக்கு மாற்றுத் திறனாளி பக்தர்கள், மூத்த குடிமக்களுக்கான டிக்கெட்டுகளையும் பக்தர்கள் ஆன்லைன் மூலம் முன்பதிவு செய்து கொள்ளலாம்.இம்மாதம் 25ம் தேதி காலை 10 மணிக்கு ஆகஸ்ட் மாதத்துக்கான ரூ.300 சிறப்பு தரிசன டிக்கெட்டுகளை பக்தர்கள் முன்பதிவு செய்து கொள்ளலாம்.

## தாம்பரம் கடற்கரை மின்சார ரயில் சேவை பாதிப்பு: பயணிகள் ஒரு மணி நேரம் கடும் அவதி

நுங்கம்பாக்கம் மே.11-

நுங்கம்பாக்கம் அருகே உயர் அழுத்த மின்கம்பி அறுந்து விழுந்ததால், தாம்பரம் கடற்கரை தடத்தில் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக மின்சார ரயில் சேவை பாதிக்கப்பட்டது. இதனால், பயணிகள் கடும் அவதியடைந்தனர். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நேற்று மதியம் பரவலாக மழை பெய்தது. இந்த நிலையில், நுங்கம்பாக்கம் ரயில் நிலையம் அருகே மதியம் 1.40 மணி அளவில் மின்சார ரயில் இயக்கத்துக்கான உயர் அழுத்த மின்கம்பி திடீரென அறுந்து விழுந்து, மின் விநியோகம் பாதிக்கப்பட்டது.




இதனால், தாம்பரத்தில் இருந்து கடற்கரை நோக்கிச் சென்ற மின்சார ரயில்கள் நுங்கம்பாக்கம், கோடம்பாக்கம், மாம்பலம், சைதாப்பேட்டை, கிண்டி, பரங்கிமலை, பழவந்தாங்கல் வரை ஆங்காங்கே நிறுத்தப்பட்டன.ரயில்கள் திடீரென நிறுத்தப்பட்டதால் பயணிகள் குழப்பம் அடைந்தனர். ரயில் சேவை சீராவதற்கு சற்று நேரம் ஆகும் என்று ரயில் நிலையங்களில் அறிவிப்பு வெளியானது. இதனால், எழும்பூர், சென்ட்ரல், கோயம்பேடு உள்ளிட்ட இடங்களுக்குச் சென்று, ரயில்கள், பேருந்துகளைப் பிடிக்க இருந்தவர்கள் ரயில்களில் இருந்து இறங்கி, மழையில் நனைந்தபடியே தண்டவாளத்தில் நடந்து சென்றனர்.இதற்கிடையே, பழுது குறித்து ரயில்வே அதிகாரிகளுக்கு தகவல் கொடுக்கப்பட்டது. தகவலின் பேரில், ரயில்வே பணியாளர்கள் விரைந்து வந்து, உயர் அழுத்த மின்பாதையில் ஏற்பட்ட பழுதை சரி செய்யும் பணியில் ஈடுபட்டனர். மதியம் 3 மணி அளவில் மின்சார ரயில் சேவை சீரானது. ஒரு மணி நேரத்துக்கும் மேலாக மின்சார ரயில் சேவை பாதிக்கப்பட்டதால், பயணிகள் மிகவும் அவதியடைந்தனர்.

## “தவறுகளை அனுமதிக்க மாட்டேன் என முதல்வர் விஜய் அறிவித்தது ஒரு நல்ல அறிகுறி” சகாயம்

சென்னை:மே.11-

“தவறுகளை அனுமதிக்க மாட்டேன் என்று முதல்வர் விஜய் இன்று பகிரங்கமாக அறிவித்துள்ளார். அதுவே ஒரு நல்ல அறிகுறி. இந்த பகிரங்க அறிவிப்பு மக்களிடத்திலே பெரிய எதிர்பார்ப்பையும், நம்பிக்கையையும் உருவாக்கியிருக்கிறது” என்று முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி சகாயம் தெரிவித்தார்.சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் இன்று காலை நடந்த நிகழ்ச்சியில், தமிழகத்தின் முதல்வராக தமிழக வெற்றிக் கழகத்தின்




தலைவர் ஜோசப் விஜய் பதவியேற்றுக் கொண்டார். அவருக்கு ஆளுநர் அர்லேகர் பதவிப் பிரமாணமும், ரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டபின்னர் செய்தியாளர்களிடம் பேசிய முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி சகாயம், “ தவறுகளை அனுமதிக்க மாட்டேன் என்று முதல்வர் விஜய் இன்று பகிரங்கமாக அறிவித்துள்ளார். அதுவே ஒரு நல்ல அறிகுறி. இந்த பகிரங்க அறிவிப்பு மக்களிடத்திலே பெரிய எதிர்பார்ப்பையும், நம்பிக்கையையும் உருவாக்கியிருக்கிறது. நான் மிகச்சிறியவன். என் 30 ஆண்டு காலத்தில் ஒரு உறுதியான, நேர்மையான போராட்டத்தை நடத்தியுள்ளேன். நான் தொடர்ந்து இந்த தமிழ் சமூகத்துக்காக என் பங்களிப்பை செய்வேன். நான் தேர்தலில் போட்டியிடுவேன் என்பது உங்களைப் போன்ற ஊடகத்தினரின் கற்பனை. நான் சமூகப் பணியில் ஆர்வம் உள்ளவன், அதில் ஈடுபடுவேன்.2010க்கு முன்பாக இந்தியாவின், ஆசியாவின் மிகப்பெரிய கிரானைட் கனிமவள ஊழலை வெளிக்கொண்டு வந்தேன். ஆனால், நமது எவ்வளவு மோசமான ஊழல் மிகுந்த அமைப்பாக இருக்கிறது என்று சொன்னால், இன்றைக்கு வரைக்கும் அந்த விவகாரத்தில் சிறு துளி கூட நகரவில்லை.தமிழக அரசுக்கு 10 லட்சம் கோடி ரூபாய் கடன் உள்ளது. அதற்காக ஒவ்வொரு ஆண்டு பட்ஜெட்டிலும் அதற்காக கணிசமான தொகை வட்டியாக கட்டப்படுகிறது. எனவே இது சவாலான பணி. இதனால் செலவீனங்களை குறைத்து, ஊழல்களை அகற்றி நிச்சயமாக லட்சியத்தோடு பயணித்தால் ஒரு காலகட்டத்தில் கடனை குறைக்க முடியும். அரசின் நிதிநிலை குறித்து வெள்ளை அறிக்கை வெளியிடுவதாக சொன்னதை வரவேற்கிறேன்” என்றார்.

## வவ்வால்களிடம் புதிய கரோனா: தாய்லாந்து விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

புதுடெல்லி:மே.11-

வவ்வால்களிடம் புதிய வகை கரோனா வைரஸை தாய்லாந்து விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இதுகுறித்து, ‘செல்’ என்ற மருத்துவ இதழில் வெளியான கட்டுரையில் கூறியிருப்பதாவது:

தாய்லாந்தில் உள்ள வவ்வால்களிடம் கண்டறியப்பட்டுள்ள புதிய வைரஸ், மனிதர்களைத் தொற்றும் ஆற்றலைக் கொண்டிருக்கலாம். இந்த வைரஸ் மக்களிடையே பரவி வருவதற்



கான ஆதாரம் இல்லை. ஆனாலும், விலங்குகளிடம் பரவும் வைரஸ்களை கண்காணிப்பது முக்கியம். இந்த ஆய்வில், வைரஸ் ஏசிஇ2 என்ற மனித உயிரணு புரதங்களுடன் இணையக் கூடும் என்று ஆராய்ச்சியாளர்கள் கவனித்துள்ளனர். இதன் பொருள் ஒரு பெருந்தொற்று உடனடியாக ஏற்படும் என்பதல்ல, மாறாக இது விலங்குகளிடம் இருந்து மனிதர்களுக்குப் பரவக்கூடிய வாய்ப்பு இருப்பதைக் காட்டுகிறது. இவ்வாறு கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

## பெங்களூருவில் சாதி பாகுபாடு காரணமாக பட்டியலின போலீஸாருக்கு வாடகை வீடு தர மறுப்பு

பெங்களூரு:மே.11-

கர்நாடக காவல் துறையில் பணியாற்றும் பட்டியலின மற்றும் பழங்குடியின போலீஸாருக்கும் வீடு வாடகைக்கு தர மறுக்கப்படுவதாக சம்பந்தப்பட்ட வகுப்பை சேர்ந்த போலீஸார், கர்நாடக போலீஸ் டிஜிபி, பெங்களூரு மாநகர ஆணையருக்கு கடிதம் எழுதியுள்ளனர்.இதுகுறித்து கர்நாடக உள்துறை அமைச்சர் பரமேஷ்வர் கூறுகையில், "பெங்களூரு மாநகரில் பணியாற்றும் காவலர்களில் 40 சதவீதமானவர்கள் தங்கும் அளவில் அரசின் குடியிருப்புகள் இருக்கின்றன. இத்தகைய பிரச்சினைகளை தீர்க்க அரசு தரப்பில் குடியிருப்புகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டியுள்ளது.அது தொடர்பாக முதல்வர் சித்தராமையாவுடன் ஆலோசித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அதேவேளையில் சாதி பாகுபாடு காரணமாக வீட்டை வாடகைக்கு தர மறுப்பவர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.



## 98 வயது பாஜக மூத்த தலைவரின் காலில் விழுந்து ஆசி பெற்ற பிரதமர் மோடி

கொல்கத்தா:மே.11-

மேற்குவங்க பாஜக அரசு பதவியேற்பு விழாவின் போது 98 வயது பாஜக மூத்த தலைவர் மாகன் லால் சர்க்காரின் காலில் விழுந்து பிரதமர் நரேந்திர மோடி ஆசி பெற்றார்.மேற்கு வங்கத்தின் சிலிகுரி பகுதியைச் சேர்ந்தவர் மாகன் லால் சர்க்கார். அவர் சியாமா பிரசாத் முகர்ஜியின் நெருங்கிய நண்பர் ஆவார். கடந்த 1952ம் ஆண்டில் காஷ்மீரில் தேசியக் கொடியேற்றும் போராட்டத்தை சியாமா பிரசாத் நடத்தினார். இந்த போராட்டத்தில் மாகன் லால் சர்க்காரும் பங்கேற்றார். அப்போது அவர் காஷ்மீரில் கைது செய்யப்பட்டார்.



மாகன் லால் சர்க்கார், சிலிகுரி மாவட்ட பாஜக தலைவராக மிக நீண்ட காலம் பணியாற்றி உள்ளார். பல்வேறு மாவட்டங்களின் பாஜக ஒருங்கிணைப்பாளராகவும் அவர் பதவி வகித்துள்ளார். கடந்த 1980களில் மேற்கு தினாஜ்பூர், ஜல்பைகுரி, டார்ஜிலிங் மாவட்டங்களில் சுமார் 10,000க்கும் மேற்பட்டோரை பாஜகவில் அவர் இணைத்தார்.கொல்கத்தாவில் நேற்று நடைபெற்ற பாஜக பதவியேற்பு விழாவில் மாகன் லால் சர்க்கார் பங்கேற்றார். அப்போது விழா மேடையில் அவரது காலில் விழுந்து பிரதமர் நரேந்திர மோடி ஆசி பெற்றார். இதுகுறித்து சமூக வலைதளத்தில் பிரதமர் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது:மேற்கு வங்கத்தில் முதல்முறையாக பாஜக அரசு பதவியேற்று உள்ளது. இந்த நேரத்தில் சியாமா பிரசாத் முகர்ஜியை நினைவுகூர்கிறேன். குறிப்பாக நாட்டுக்காகவும் மேற்கு வங்கத்துக்காகவும் அவர் அளித்த பங்களிப்பை நினைவு கூர்கிறேன்.கொல்கத்தா பதவியேற்பு விழாவில் தேசியவாதி மாகன் லால் சர்க்காரை சந்திக்கும் அரிய வாய்ப்பு கிடைத்தது. அவர், சியாமா பிரசாத் முகர்ஜியோடு இணைந்து பணியாற்றியவர் ஆவார். அவரோடு இணைந்து ஜம்மு காஷ்மீர் போராட்டத்தில் பங்கேற்றவர். தனது வாழ்நாளை பாஜகவுக்காக அவர் ஒதுக்கி உள்ளார். மேற்கு வங்கத்தில் பாஜக ஆழமாக கால் ஊன்ற அவர் முக்கிய பங்காற்றி இருக்கிறார். மாகன் லால் சர்க்கார் போன்ற பாஜக தலைவர்களால் கட்சி வலுவடைகிறது. அவரை நினைத்து பாஜக மிகுந்த பெருமிதம் கொள்கிறது. இவ்வாறு பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்

## ‘தமிழ்த்தாய் வாழ்த்து முதலிடம் பெறுவதை தவெக அரசு உறுதி செய்ய வேண்டும்’

### இந்திய கம்யூனிஸ்ட்

சென்னை:மே.11-

தமிழ்த்தாய் வாழ்த்து முதலிடம் பெறுவதை தமிழக வெற்றிக் கழகம் உறுதி செய்ய வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் மு. வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், ‘தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் முடிவில் தனிப் பெரும் கட்சியாக வந்த தமிழக வெற்றிக் கழகத்தை ஆட்சியமைக்க அழைக்காமல் ஆளுநர் இழுத்தடித்து வந்தார்.

குறுக்கு வழியில் ஆட்சியமைக்க பல்வேறு வழிகளில் நடந்த முயற்சிகளை முறியடிக்க, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் வெற்றி பெற்ற, இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி, மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி ஆகிய கட்சிகள் கலந்தாலோசித்து வழங்கிய ஆதரவின் அடிப்படையில் இன்று (10.05.2026) தமிழக வெற்றிக் கழகம் ஆட்சி பொறுப்பை ஏற்றுக் கொண்டது. அரசின் முதல்வர் மற்றும் அமைச்சரவை



உறுப்பினர்கள் பதவி ஏற்பு விழாவும் நடைபெற்றது. இந்த விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்து மூன்றாம் நிலைக்கு தள்ளப்பட்டு, வந்தேமாதரம், நாட்டுப் பண் முதல் இரு நிலைகளுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. இது தமிழ்நாடு அரசு இதுவரை அரசு விழாக்களில் தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்தும், நிறைவில் தேசிய கீதமும் பாடுவது, நாட்டின் விடுதலைக்கு பிறகு இதுவரை கடைப்பிடித்து வரும் மரபாகும்.

“வந்தேமாதரம்” ஒரு குறிப்பிட்ட கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்டதும் ஒரு மதச்சார்புடையதுமான அப்பாடல் என்பதால் தேசிய கீதமாக இருக்க முடியாது என விடுதலை இயக்கக் காலத்திலேயே தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், ஆளுநர் மாளிகை உத்தரவுப்படி, தமிழ்நாடு அரசு ஏற்பாடு செய்த பதவி ஏற்பு விழா நிகழ்ச்சி நிரலில் “வந்தேமாதரம்” பாடலுக்கு முதலிடம் வழங்கி, தமிழை மூன்றாம் நிலையில் வைத்தது மரபை மீறிய செயலாகும்.

இந்த தவறுக்கு காரணமானவர்கள் யார் என்பதை தமிழ்நாடு அரசு பொதுமக்களுக்கு விளக்க வேண்டும். தமிழக வெற்றிக் கழகம் தமிழ்த்தாய் வாழ்த்து முதலிடம் பெறுவதை உறுதி செய்ய வேண்டும். இந்தத் தவறு தொடருவதை அனுமதிக்கக் கூடாது. நாளை (11.05.2026) சட்டப்பேரவை உறுப்பினர்கள் பதவி ஏற்புக்காக கூடும் சட்டப் பேரவைக் கூட்டத்திலும், அனைத்து அரசு நிகழ்வுகள் விழாக்களிலும் முதலில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடுவதையும், நிறைவாக நாட்டுப் பண் இசைப்பதையும் உறுதி செய்ய வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு, தமிழ்நாடு அரசின் முதலமைச்சரையும், தற்காலிக பேரவைத் தலைவரையும் கேட்டுக் கொள்கிறது’ எனத் தெரிவித்துள்ளார்.

## மாநகர பேருந்து மோதி விபத்தில் பலியான பெயின்டர் குடும்பத்துக்கு ரூ.25.81 லட்சம் இழப்பீடு

சென்னை மே.11-

மாநகர பேருந்து மோதிய விபத்தில் பலியான பெயின்டரின் குடும்பத்துக்கு ரூ.25.81 லட்சத்தை இழப்பீடாக வழங்க சென்னை மோட்டார் வாகன விபத்து வழக்குகளுக்கான இழப்பீட்டு தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது.சென்னை, அயனாவரம் பகுதியைச் சேர்ந்த பெயின்டர் சதீஷ்குமார், கடந்த 2022 செப்.21 அன்று தனது பைக்கில் நண்பருடன் வில்லிவாக்கம் நோக்கி சென்று கொண்டிருந்தார். அப்போது, புது ஆவடி சாலையில் மாநகரப் பேருந்து மோதி படுகாயமடைந்த சதீஷ்குமார் பரிதாபமாக உயிரிழந்தார்.இந்நிலையில், தனது மகனின் இறப்புக்கு ரூ.20 லட்சம் இழப்பீடு கோரி, சதீஷ்குமாரின் தாயார் ராணி சென்னை மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தீர்ப்பாயத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி எம்.அருந்ததி, மாநகரப் பேருந்து ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதை காரணமாகவே இந்த விபத்து நிகழ்ந்துள்ளது எனக்கூறி, உயிரிழந்த சதீஷ்குமாரின் தாயார் மற்றும் அவரது குடும்பத்துக்கு இழப்பீடாக ரூ.25,81,800ஐ ஆண்டுக்கு 7.5 சதவீத வட்டியுடன் வழங்க மாநகர போக்குவரத்து கழகத்துக்கு உத்தரவிட்டார்.

## பிளஸ் 1 தொழிற்கல்வி திறன் பயிற்சி தள்ளிவைப்பு

சென்னை:மே.11-

பிளஸ் 1 தொழிற்கல்வி மாணவர்களுக்கான திறன் பயிற்சி நாளை நடைபெற இருந்த நிலையில், நிர்வாக காரணங்களால் தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக பள்ளிக் கல்வி இயக்குநரகம் சார்பில் முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது: அரசு மேல்நிலை பள்ளிகளில் தொழிற்கல்வி பாடப்பிரிவில் பிளஸ் 1 பயிலும் மாணவர்களுக்கு 2ம் கட்ட திறன் பயிற்சி நாளை வழங்க திட்டமிடப்பட்டிருந்தது. அவை நிர்வாக காரணங்களால் தள்ளிவைக்கப்படுகிறது. பள்ளி திறந்த பின்னர் பயிற்சி நடைபெறும். இதற்கான நாள் பின்னர் தெரிவிக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது பாகிஸ்தானுக்கு உதவியதை ஒப்புக் கொண்ட சீனா

புதுடெல்லி:மே.11-

கடந்த ஆண்டு இந்தியா நடத்திய ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது, பாகிஸ்தானுக்குக் களத்தில் தொழில்நுட்ப உதவி வழங்கியதை சீனா முதல்முறையாக உறுதிப்படுத்தியுள்ளது.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் காஷ்மீரின் பஹல்காமில் நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதலில் சுற்றுலாப் பயணிகள் 26 பேர் உயிரிழந்தனர். இதில் பாகிஸ்தான் தீவிரவாதிகளுக்கு தொடர்பு இருப்பது தெரிய வந்தது. இதையடுத்து, மே மாதம் பஹல்காம் தாக்குதலுக்குப் பதிலடியாக ‘ஆபரேஷன் சிந்தூர்' என்ற பெயரில் பாகிஸ்தானில் உள்ள தீவிரவாத முகாம்கள் மீது இந்தியா தாக்குதல் நடத்தியது. இதனால் இந்தியா, பாகிஸ்தான் இடையே போர் மூண்டது. பின்னர் போர் வாபஸ் பெறப்பட்டது. இந்த குறுகிய கால போரில் பாகிஸ்தானுக்கு சீனா உதவி செய்ததாக இந்தியா கூறிய புகார்



களைச் சீனா இதுவரை மறுத்து வந்தது.

இந்நிலையில், சீனாவின் அரசு ஊடகமான சிசிடிவி, ஏவியேஷன் இண்டஸ்ட்ரி கார்ப்பரேஷன் ஆஃப் சீனா (ஏபிஜசி) பொறியாளர் ஷாங் ஹெங் என்பவரின் பேட்டியை ஒளிபரப்பியது. அதில், ஆபரேஷன் சிந்தூர் மோதலின் போது பாகிஸ்தான் விமானப் படை தளங்களில் தங்கியிருந்து ஜே10சிஇ போர் விமானங்களுக்குத் தொழில்நுட்ப உதவி வழங்கியதை அவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்திய ராணுவத் துணைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ராகுல் ஆர் .சிங் ஏற்கெனவே குற்றம் சாட்டியபடி, சீனா தனது செயற்கைக்கோள் தரவுகளைப் பாகிஸ்தானுக்கு உடனுக்குடன் வழங்கி, இந்தியாவைத் தாக்கப் பாகிஸ்தானை ஒரு இரவல் கத்தியாக பயன்படுத்தியுள்ளது இப்போது நிரூபணமாகியுள்ளது.

இந்தியத் தரப்பில் பாகிஸ்தானின் தீவிரவாத முகாம்கள் மற்றும் ராணுவத் தளங்கள் அழிக்கப்பட்டதாகக் கூறப்படும் நிலையில், சீனா தனது போர் விமானங்களின் திறனை உயர்த்திப் பிடிப்பதன் மூலம், தனது ஜே35 ஸ்டெல்த் ரக விமானங்களை உலக நாடுகளுக்கு விற்பனை செய்ய இந்தச் சூழலைப் பயன்படுத்திக் கொள்வதாகப் பாதுகாப்பு வல்லுநர்கள் கருதுகின்றனர்.

சீனாவின் இந்த வெளிப்படையான ஒப்புதலைத் தொடர்ந்து, இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் சீனாவுடனான வர்த்தகக் கொள்கைகள் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும் என்று எதிர்க் கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

## மக்கள் நலன் காக்க விஜய்யின் அரசுக்கு பாமக முழு ஆதரவு அளிக்கும்: அன்புமணி

சென்னை:மே.11-

மக்கள் நலன் காப்பதற்கான விஜய் அரசின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் பாட்டாளி மக்கள் கட்சி அதன் முழு ஆதரவை அளிக்கும் என்று பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: "தமிழ்நாட்டின் முதல்வராக தவெக தலைவர் விஜய், அவருடன் 9 பேர் கொண்ட அமைச்சரவையும் இன்று பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறது. புதிய முதல்வருக்கும், அவரது அமைச்சரவை





சகாக்களுக்கும் எனது உளமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வந்திருப்பது எந்தக் கட்சியாக இருந்தாலும், ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுத்த மக்களின் நோக்கமும், எதிர்பார்ப்பும் ஒன்று தான். எந்த வகையான போதையும் இல்லாத, பெண்களும், குழந்தைகளும் பாதுகாப்பாகவும், நிம்மதியாகவும் வாழக்கூடிய, இளைஞர்களுக்கு தரமான கல்வியும், வேலை வாய்ப்பும் வழங்கக்கூடிய, உழவர்களின் வருமானத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தக் கூடிய, அடித்தட்டு மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தக் கூடிய, அரசு ஊழியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றக் கூடிய, இவை அனைத்துக்கும் மேலாக சமூக நீதியை பாதுகாக்கக் கூடிய அரசு அமைய வேண்டும் என்பது தான் அது. இந்த எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற புதிய அரசு தீவிரமாக முயல வேண்டும்.தவெகவின் தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றுள்ள முதல் வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கான ஆணையில் புதிய முதல்வர் முதல் கையெழுத்திட வேண்டும்; மற்ற வாக்குறுதிகளையும் விரைந்து நிறைவேற்ற வேண்டும். மக்கள் நலன் காப்பதற்கான விஜய் அரசின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் பாமக அதன் முழு ஆதரவை அளிக்கும்; அரசின் தவறுகளை சுட்டிக்காட்டுவதிலும், அந்தத் தவறை திருத்தச் செய்வதிலும் பொறுப்புள்ள, ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சியாக பாமக செயல்படும்.” என்று அன்புமணி கூறியுள்ளார்.

# தவெக தமிழக முதலமைச்சர் விஜய்க்கு வாழ்த்து தெரிவித்து தேசிய தெலுங்கு சிறுபான்மையினர் நல சமூகத்தினர் சார்பில் வெற்றி கொண்டாட்டம்



■ தமிழக முதலமைச்சராக பதவியேற்றுள்ள விஜய் அவர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கும் விதமாக தேசிய தெலுங்கர் சிறுபான்மையினர் சமூக கூட்டமைப்பு மாநில தலைவர் நாகா ஆர்.அரவிந்தன் தலைமையில், சேலம் ராஜகணபதி திருக்கோவிலில், தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் அவர்களின் பெயருக்கு சிறப்பு பூஜைகள் செய்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. இதில், தவெக நிர்வாகிகள் ரீஹான பேகம், ரேஷ்மா, வித்யா கார்த்திக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஜாவித் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகிறது: தமிழகத்தில் 12ம் தேதி முதல் கனமழை தீவிரமடையும்

சென்னை:மே.11-

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தென்கிழக்கு அரபிக் கடல் பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய கேரள கடல் பகுதிகளுக்கு அப்பால் உள்ள லட்சத்தீவு பகுதிகளின் மேல் சுமார் 1.5 கி.மீ. உயரத்தில் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது.மேலும், மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய இலங்கை பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல சுழற்சி சுமார் 5.8 கி.மீ உயரம் வரை நிலவுகிறது. இதன் காரணமாக தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் 11ம் தேதி ஒரு குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகக் கூடும்.




மரத்வாடா முதல், கடலோர கர்நாடகா, வட உள் கர்நாடகா மற்றும் மத்திய மகாராஷ்டிரா வழியாக ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வுப் பாதை நிலவுகிறது. இதன் காரணமாக இன்று (மே 10) தென் தமிழகத்தில் பெரும்பாலான இடங்களிலும், வட தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், 11, 12ம் தேதிகளில் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், 13ம் தேதி வட தமிழகத்தில் பெரும்பாலான இடங்களிலும், தென் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், 14, 15ம்தேதிகளில் பெரும்பாலான இடங்களிலும் இடி, மின்னல், பலத்த காற்றுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். ராமநாதபுரம், கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் இன்றும், நாளையும் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக் கூடும். நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், ராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை,மயிலாடுதுறை, கடலூர் மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் 12ம் தேதியும், சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், ராணிப்பேட்டை, காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, கடலூர், மயிலாடுதுறை, விழுப்புரம், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டங்கள், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் 13ம் தேதியும் இடி மின்னலுடன் கனமழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் இன்று முதல் 13ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட 7 டிகிரி ஃபாரன்ஹீட் வரை குறையக்கூடும்.

நகரின் ஓரிரு பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 93 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 75 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.தமிழகத்தில் நேற்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக திருநெல்வேலி மாவட்டம் ஊத்தில் 17 செ.மீ, நாலுமுக்கில் 16 செ.மீ, காக்காச்சியில் 14 செ.மீ, மாஞ்சோலையில் 11 செ.மீ, தென்காசி மாவட்டம் ஆய்க்குடியில் 9 செ.மீ, தேனி மாவட்டம் போடிநாயக்கனூரில் 9 செ.மீ, தென்காசி மாவட்டம் கருப்பாநதி அணை, தூத்துக்குடி மாவட்டம் குலசேகரப்பட்டினம், தென்காசி மாவட்டம் செங்கோட்டை, தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தில் தலா 7 செ.மீ மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.


# கடல் மணலில் விஜய் சிலை வடிவமைப்பு: வாழ்த்து தெரிவித்த சுதர்சன் பட்நாயக்

புரி:மே.11-




தமிழக முதல்வராக பதவியேற்கும் தவெக தலைவர் விஜய்க்கு பிரபல மணற் சிற்பக் கலைஞர் சுதர்சன் பட்நாயக், ஒடிசா மாநிலம் புரி கடற்கரையில் உள்ள கரையோர மணலை பயன்படுத்தி விஜய்யின் மணற் சிற்பத்தை வடிவமைத்து வாழ்த்து தெரிவித்துள்ளார். தமிழக சட்டப்பேரவை தேர்தலில் 108 இடங்களில் வெற்றி பெற்ற தமிழக வெற்றிக் கழகம், காங்கிரஸ் 5, இந்திய கம்யூனிஸ்ட் 2, மார்க்சிஸ்ட் 2, விசிக 2 மற்றும் ஐயுஎம்எல் 2 ஆகிய கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சி அமைக்கிறது. விஜய் முதல்வராக ஞாயிற்றுக்கிழமை பதவியேற்கிறார். இதில் காங்கிரஸ் கட்சி, தவெக கூட்டணி அரசில் பங்கேற்கிறது. மற்ற கட்சிகள் நிபந்தனையற்ற ஆதரவை வழங்கி உள்ளன.இதையடுத்து அவருக்கு மக்கள் மற்றும் பல்வேறு துறையை சார்ந்த பிரபலங்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். அந்த வரிசையில் மணற் சிற்பக் கலைஞர் சுதர்சன் பட்நாயக்கும் இணைந்துள்ளார். முக்கிய தருணங்கள் மற்றும் விழா நாட்களில் தான் பெற்ற கலையான மணற் சிற்பக் கலையை கொண்டு அதை போற்றுவதை சுதர்சன் பட்நாயக் வழக்கமாக கொண்டுள்ளார்.

அந்த வகையில் ஒடிசா மாநிலம் புரி கடற்கரையில் விஜய்யின் சிலையை அவர் வடிவமைத்துள்ளார். அதில் விஜய் சினிமா துறையில் நடிகராக இருந்து தவெக எனும் அரசியல் கட்சியை தொடங்கி, தேர்தலில் வென்று, முதல்வராகி உள்ளதை குறிப்பிடும் வகையிலான விளக்கத்தை சுதர்சன் பட்நாயக் கொடுத்துள்ளார். அதில் ‘வாழ்த்துகள் விஜய் அண்ணா’ என்பதும் இடம்பெற்றுள்ளது. இதை தனது சமூக வலைதள பக்கத்தில் பகிர்ந்து விஜய்க்கு அவர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.




# தமிழக முதல்வராக பதவியேற்ற விஜய்க்கு வாழ்த்து தெரிவித்து, சேலத்தில் த.வெ.க வினர் வெற்றி கொண்டாட்டம்

சேலம் மே.11-

.சேலம் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் தமிழன் ஆ.பார்த்திபன் அவர்களின் சார்பில், சேலம் மாவட்டம் தவெக 49வது கோட்டம், மத்திய மாவட்ட செயற்குழு உறுப்பினர் திருமதி சத்யா தலைமையில், தவெக வெற்றி பெற்று, தமிழக முதலமைச்சராக பதவியேற்றுள்ள விஜய்க்கு வாழ்த்து தெரிவிக்கும் வகையில், நெத்திமேடு பகுதியில் அமைந்துள்ள காந்தி காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடினார். இந்நிகழ்ச்சியில், கழக நிர்வாகிகள், ஹரிஹரன், சுதன், சரவணன், யுவராஜ், கோகுல், Dr. அருள்குமார், ஹரிகேசவன், விகர்த்தனன், கழக பொறுப்பாளர் மற்றும் நிர்வாகிகள் இதில் கலந்து கொண்டனர்.

# ஹார்முஸ் நீரிணை அருகே படகு தீப்பிடித்து இந்திய மாலுமி பலி

புதுடெல்லி:மே.11-

ஹார்முஸ் நீரிணை அருகே படகு தீப்பிடித்ததில் இந்திய மாலுமி உயிரிழந்தார். மேலும் படகில் இருந்த 18 ஊழியர்கள் மீட்கப்பட்டனர். பாரசீக வளைகுடாவையும் ஓமன் வளைகுடாவையும் இணைக்கும் ஒரு முக்கிய கடல்வழிப் போக்குவரத்துக்கு முக்கியமானது ஹார்முஸ் ஜலசந்தியாகும். உலகின் எண்ணெய் விநியோகத்தில் கணிசமான பங்கு இந்த பகுதி வழியாகவே செல்கிறது. ஈரான் மற்றும் அமெரிக்காவிற்கு இடையேயான போருக்கு பின் தற்போது தற்காலிக போர் நிறுத்தம் அமலில் உள்ளது.



ஈரானிய துறைமுகங்களைப் பயன்படுத்தும் மற்றும் ஈரானிய எண்ணெய் ஏற்றிச் செல்லும் கப்பல்களுக்கு ஹார்முஸ் ஜலசந்தி வழியாகச் செல்ல அமெரிக்கா தடை விதித்துள்ளது. இந்த நிலையில் ஹார்முஸ் ஜலசந்திக்கு அருகே ஒரு படகு நேற்று தீப்பிடித்தது. இதில், இந்திய மாலுமி ஒருவர் உயிரிழந்தார். 4 பேர் படுகாயமடைந்தனர். அந்தப் படகில் இருந்த 18 இந்திய மாலுமிகளை, அவ்வழியாகச் சென்றுகொண்டிருந்த ஒரு கப்பல் மீட்டுள்ளது.

தீ விபத்திற்கான காரணம் தெரியவில்லை. தகவல்களின்படி, காயமடைந்த மாலுமிகள் துபாயில் மருத்துவ சிகிச்சை பெற்று வருகின்றனர். துபாயில் உள்ள இந்தியத் துணைத் தூதரகம், எக்ஸ் தளத்தில் வெளியிட்ட ஒரு பதிவில், தங்கள் அதிகாரிகள் மீட்கப்பட்ட இந்திய மாலுமிகளைச் சந்தித்துள்ளதாகத் தெரிவித்துள்ளது. மேலும் படகு உரிமையாளருடன் தொடர்பில் இருப்பதோடு, சாத்தியமான அனைத்து உதவிகளையும் செய்து வருகிறோம் என கூறியுள்ளது

# விஜய், ராகுல் காந்தி இணைந்திருக்கும் ஏஐ வீடியோவை பகிர்ந்த கிரிஷ் சோடங்கர்

சென்னை:மே.11-

முதல்வர் விஜய், வருங்கால பிரதமர் ராகுல் காந்தி என குறிப்பிட்டு ஏஐ வீடியோவை தமிழக காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர், சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ளார்.தமிழக சட்டப்பேரவை தேர்தலில் 108 இடங்களில் வெற்றி பெற்ற தமிழக வெற்றிக் கழகம், காங்கிரஸ் 5, இந்திய கம்யூனிஸ்ட் 2, மார்க்சிஸ்ட் 2, விசிக 2 மற்றும் ஐயுஎம்எல் 2 ஆகிய கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சி அமைக்கிறது. விஜய் முதல்வராக ஞாயிற்றுக்கிழமை பதவியேற்கிறார். இதில் காங்கிரஸ் கட்சி, தவெக கூட்டணி அரசில் பங்கேற்கிறது. மற்ற கட்சிகள் நிபந்தனையற்ற ஆதரவை வழங்கி உள்ளன.இந்நிலையில், தமிழக காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர், ஏஐ வீடியோ ஒன்றை பகிர்ந்துள்ளார். தமிழ் சினிமாவின் உச்ச நடிகர்களான ரஜினிகாந்த் மற்றும் கமல்ஹாசன் இணைந்து நடிக்கும் படத்தை இயக்குநர் நெல்சன் இயக்குகிறார். இதை அறிவிக்கும் விதமாக தனது பாணியில் இருவரும் இணைந்து வரும் வீடியோவை படக்குழு வெளியிட்டது. அந்த வீடியோவை பல்வேறு தருணங்களில் பலரும் வெவ்வேறு விதமாக மாற்றி பகிர்ந்தது உண்டு.

தற்போது தவெக உடன் காங்கிரஸ் கட்சி தேர்தலுக்கு பிந்தைய கூட்டணி அமைத்துள்ளது. தமிழகத்தில் அடுத்து வரும் தேர்தல்களை இரண்டு கட்சிகளும் இணைந்து சந்திக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தவெக தலைவர் விஜய், நாளை தமிழக முதல்வராக பதவியேற்கிறார்.

இந்நிலையில், விஜய் மற்றும் ராகுல் காந்தி வருவது போல அந்த வீடியோவை மாற்றி பகிர்ந்துள்ளார் கிரிஷ் சோடங்கர். அதற்கு ‘வருங்கால பிரதமர் ராகுல் காந்தி உடன் முதல்வர் விஜய்’ என அவர் கேப்ஷன் கொடுத்துள்ளார். இப்போது அது சமூக வலைதளத்தில் கவனம் பெற்றுள்ளது.

# ஈரோடு பாசூர் அரசு மேல்நிலைப்பள்ளி +2 பொது தேர்வில் 100% தேர்ச்சி

ஈரோடு.மே.11-

ஈரோடு மாவட்டம் கொடுமுடி வட்டம் பாசூர் அரசு மேல்நிலைப் பள்ளியானது 1962 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது...அந்த பகுதிகளில் மாணவ, மாணவிகளுக்கு தரமான கல்வியை வழங்கி முன்னணி பள்ளியாக திகழ்ந்து வருகிறது... 2026 ஆம் ஆண்டு அரசு பொது தேர்வு எழுதிய 49 மாணவ, மாணவிகளும் 100% தேர்ச்சி பெற்று பள்ளிக்கு பெருமை சேர்த்து உள்ளனர்...1) 550/600 மதிப்பெண் பெற்று வி.கிருஷ்ணன் என்ற மாணவன் பள்ளியில் முதலிடம், 2) 541/600 மதிப்பெண் பெற்று ஆ.சஞ்சீவிகுமார் என்ற மாணவன் பள்ளியில் இரண்டாவது இடமும், 3)




486/600 மதிப்பெண்கள் பெற்று எஸ்.ரம்யா என்ற மாணவி பள்ளியில் மூன்றாவது இடமும் பெற்று சாதனை படைத்துள்ளனர். அதனைத் தொடர்ந்து ஆர்.சஞ்சீவிகுமார் என்ற மாணவன் கணினி பயன்பாடு பாடத்தில் 100/100 மதிப்பெண்கள் பெற்றுள்ளார்... சிறப்பாக தேர்வு எழுதிய அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் அதற்கு உறுதுணையாக இருந்த தலைமை ஆசிரியர் மற்றும் இருபால் ஆசிரியர் பெருமக்களுக்கு ஊர் பொதுமக்கள், பெற்றோர் ஆசிரியர் கழகம் மற்றும் முன்னாள் மாணவர்கள் அறக்கட்டளை சார்பாக நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொண்டனர்...

# கடலோர காவல் படையில் விரைவு ரோந்து கப்பல் அச்சல் சேர்க்கப்பட்டது

புதுடெல்லி:மே.11-

கடலோர காவல்படைக்காக கோவா ஷிப்யார்டு நிறுவனத்தால் கட்டப்பட்டு வரும் 8 அதிவேக ரோந்து கப்பல்களில் 5வது கப்பல் ‘அச்சல்’. புதிய தலைமுறை ஆதம்யா வகை அதிவேக ரோந்து கப்பலான இது கடலோர காவல்படையில் நேற்று முறைப்படி சேர்க்கப்பட்டது. இதற்கான விழாவில் பாதுகாப்பு அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் மற்றும் கொள்முதல் தலைமை இயக்குநர் ஏ.அன்பரசு, கடலோர காவல்படை மண்டலத்தின் தளபதி இன்ஸ்பெக்டர் ஜெனரல் டெக்கூர் சசிகுமார் மற்றும் உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.இந்த கப்பல் குஜராத்தின் வதினாரில் நிலைநிறுத்தப்பட்டு, கிழக்கு கடல் எல்லையை பாதுகாப்பதில் கடலோர காவல் படையின் பங்கை வலுப்படுத்தும். இந்த கப்பல், கண்காணிப்பு, இடைமறிப்பு, தேடுதல் மற்றும் மீட்பு, கடத்தல் தடுப்பு நடவடிக்கைகள், மாசுக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் உள்ளிட்ட பலதரப்பட்ட பணிகளை மேற்கொள்ளும். 51 மீட்டர் நீளமும், 320 டன் எடையும் கொண்ட இந்த கப்பல் மணிக்கு 27 நாட்டிக்கல் மைல் வேகத்தில் பயணிக்கக் கூடியது. 50 சதவீதத்திற்கும் அதிகமான உள்நாட்டு பொருட்களை கொண்டு இந்த கப்பல் கட்டப்பட்டுள்ளது

# சிறுமிக்கு பாலியல் துன்புறுத்தல் இலங்கை புத்த துறவி கைது

கொழும்பு: மே.11-

இலங்கை அனுராதபுரத்தில் உள்ள புத்த மட துறவியாக இருப்பவர் பல்லேகாமா ஹேமரத்தனா(71). புத்த மடத்தில் 15 வயது சிறுமிக்கு பாலியல் துன்புறுத்தல் அளித்தது தொடர்பாக துறவி ஹேமரத்தனா மீது கடந்த மார்ச் மாதம் புகார் அளிக்கப்பட்டிருந்தது. ஆரம்பத்தில் சிறுமி கடத்தப்பட்டதாக போலீசில் புகார் பதிவு செய்யப்பட்டிருந்தது. போலீசார் விசாரணை நடத்திய போதுதான் சிறுமி பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டது தெரியவந்தது.

போலீசார் வழக்கு பதிவு செய்து துறவிக்கு எதிராக கைது வாரண்ட் பிறப்பித்தனர். இந்த பாலியல் துன்புறுத்தலுக்கு உடந்தையாக இருந்ததாக சிறுமியின் தாய் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த நிலையில், கொழும்புவில் ஒரு மருத்துவமனையின் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த புத்த துறவியை நேற்று முன்தினம் போலீசார் கைது செய்தனர். சிறுமியின் தாயாரும் கைது செய்யப்பட்டுள்ளார் என இலங்கை போலீசார் தெரிவித்தனர்










SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000